## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.124/2016

2025 -ம் ஆண்டு ஜூலை மாதம் 17 -ம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியின் பி.சா.2 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு.R. சீனிவாசன், Bench Clerk(Gr-III) அவர்களால் சாட்சியம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 17.07.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. கண்ணன் (DW-2) | வயது | : | 57 /2025 |
| க/த பெயர் | : | திரு. பக்கிரிசாமி | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | ரங்கநாதபுரம் | வட்டம் | | மன்னார்குடி |

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் 2ம் பிரதிவாதி ஆவேன். நான் இன்று இந்த வழக்கு சம்மந்தமாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதை படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தை எனது தரப்பு முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள பிரார்த்திக்கிறேன்.

19.07.2007 தேதியிட்ட கிரய உடன்படிக்கை அசல் ஆவணத்தை பிரதிவாதி தரப்பில் குறியிடு செய்ய வாதியின் கற்றறிந்த வழக்கறிஞர் மேற்படி ஆவணமானது வாதிக்கு தொடர்பில்லாததாலும், பதிவு செய்யப்படாத ஆவணம் என்பதால் பிரதிவாதி தரப்பில் குறியீடு செய்ய ஆட்சேபணை செய்யப்பட்டதை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்து இந்த ஆவணத்தின் உண்மை தன்மை தொடர்பாக தீர்ப்பின்போது முடிவு செய்து கொள்ளலாம் என முடிவு செய்து வாதி தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.

| வ. எண். | தேதி | ஆவணங்கள் | குறியீடு விவரம் |
|---|---|---|---|
| 1 | 19.07.2007 | தேதியிட்ட கிரய உடன்படிக்கை அசல் (ஆட்சேபணையுடன் குறியீடு செய்யபடுகிறது) | பி.சா.ஆ.1 |
| 2 | 21.06.2008 | தேதியிட்ட கிஸ்தி ரசீது அசல் | பி.சா.ஆ.2 |

| | | | |
|---|---|---|---|
| 3 | 15.02.2010 | தேதியிட்ட கிஸ்தி ரசீது அசல் | பி.சா.ஆ.3 |
| 4 | 02.04.2012 | தேதியிட்ட கிஸ்தி ரசீது அசல் | பி.சா.ஆ.4 |
| 5 | 10.03.2015 | தேதியிட்ட கிஸ்தி ரசீது அசல் | பி.சா.ஆ.5 |
| 6 | 05.03.2016 | தேதியிட்ட கிஸ்தி ரசீது அசல் | பி.சா.ஆ.6 |

எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ளவாறும் பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.6 வரை உள்ள ஆவணங்கள் அடிப்படையில் உத்தரவு பிறப்பிக்குமாறு பிராத்திக்கிறேன்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வாதியின் கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2025.07.17 17:19:44 +0530

District Munsif

Mannargudi.